# MASTER NEGATIVE NUMBER

6095.32

# திருப்புகழமிர்தம்
## மலர் 19, இதழ் 2
## May 1954

Record no. 166

*Tiruppukaḻamirtam*

*Malar 19, itaḻ 2*

*May 1954*

Record no. 166

# திருப்புகழமிர்தம்


மலர் 19 | ஜய வைகாசி | இதழ் 2




" அறுமுகம் எனநேக் கென்பே லாமுரு கன்புறுதோ "

ஆசிரியர்: கிருபானந்தவாரி





---

### வரப்பெற்றோம்

**கதிர்காம மான்மியம்:** கதிர்காமத் தலத்தின் சிறப்பும், செல்லும் நடை வழியும், பிறவும் விரிவாகக் கொண்ட நூல். ஆக்கியோன்: அ. சின்னையா சிவம், ஆசிரியர், விவேகானந்த வித்யாலயம், 34 மேட்டுத்தெரு, கொழும்பு-13. விலை ரூ. 1-0-0.

**தமிழிசைப் பாடல்கள்** (19-ம் தொகுதி)

திருப்புகழ் சுரதாளக் குறிப்புடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்ட மிகச் சிறந்த தமிழ் இசை நூலாகும். இந்நூல் தமிழிசை உலகிற்குப் பெரிதும் பயன்படும். ஆழ்ந்த இசை ஞான அனுபவ அறிஞர்களால் உருவான இந்நூல் சங்கீத வித்வான்களுக்கும், அபிமானிகளுக்கும் பெரிதும் பயன்படும். அன்பர்கள் ஆதரிப்பார்களாக. விலை ரூ. 1—8—0.

கிடைக்குமிடம்:— அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர், சிதம்பரம்.

உ



ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் முன்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"


மலர் 19 | ஜய ஆண்டு வைகாசித் திங்கள் மே-1954 | இதழ் 2


## திருப்புகழ்

### பொது

நாரியர்க ளாசையைக் கருதாதே-
நானுனிரு பாதபத் மமுநாட;
ஆரமுத மானசர்க் கரைதேனே-
ஆனஅநு பூதியைத் தருவாயே;
காரணம தானவுத் தமசீலா-
கானகுற மாதினைப் புணர்வோனே;
சூரர்கிளை தூளெழப் பொரும்வேலா-
தோகைமயில் வாகனப் பெருமாளே.

#### பதவுரை

காரணமது ஆன உத்தமசீலா - அகில உலகங்களுக்கும் காரணமாக விளங்கும் உத்தமசீலரே! கான குற மாதினை புணர்வோனே - வனத்தில் வாழ்ந்த வள்ளியம்மையாரை மணந்தவரே! சூரர் கிளை தூள் எழ - சூரபன்மனுதி யவுணர்களுடைய சுற்றம் மடிந்து பொடிபடுமாறு, பொரும் வேலா - போர் புரிந்த வேலாயுதத்தை யுடையவரே! தோகைமயில் வாகன - தோகையுடன் கூடிய மயிலை வாகனமாக வுடையவரே! பெருமாளே - பெருமையின் மிக்கவரே! நாரியர்கள் ஆசையை கருதாதே - பெண்களுடைய விருப்பத்தை எண்ணாமல், நான் உன் இரு பாதபத்மமும் நாட - அடியேன் உமது இரு திருவடிக் கமலங்களையே நாடி உய்யும்படி, ஆர் அமுதம் ஆன - அருமையான அமுதம் போன்றதும், சர்க்கரை தேனே ஆன - சர்க்கரையைப்போலவும் தேனைப்போலவும் தித்திப்பதுமாகிய, அநுபூதியை தருவாயே - அத்துவித அருள் ஞானத்தைத் தந்தருளுவீர்.

## பொழிப்புரை

எல்லாவுலகங்கட்கும் காரணப் பொருளாக விளங்கும் உத்தமசீலரே! வனத்தில் வசித்த வள்ளியம்மையைக் கலந்தவரே! சூராதியசுரர்களுடைய சுற்றம் பொடிபட்டொழியுமாறு போர்புரிந்த வேலாயுதரே; தோகையுடன் கூடிய மயிலை வாகனமாகக் கொண்ட பெருமித முடையவரே! பெண்கள்மீது வைக்கும் அவாவைக் கொள்ளாமல், அடியேன் தேவரீரது திருவடிக் கமலங்கள் இரண்டையும் தியானம் புரிந்து, அரிய அமுதமும் சர்க்கரையும் தேனும் போன்ற அத்துவித முத்தியைப் பெற அருள்புரிவீர்.

## விரிவுரை

**நாரியர்க ளாசையைக் கருதாதே:—**

ஆசை மிகவும் கொடியது; ஆசையினாலேயே பிறவி வருகின்றது; ஆசை தொலைந்தாலன்றி பிறவி தொலையாது. "பிறவியற நினைகுவனென் ஆசைப் பாடைத் தவிரேனே?" என்று அருணகிரிநாதர் பழநிமலைத் திருப்புகழில் கூறுகின்றார்.

ஆசை, மண் பொன் பெண் என்ற மூன்று வகையில் தாவி நிற்கின்றது. மண்ணாசையும், பொன்னாசையும் மனிதனைத் தவிர ஏனைய பிறப்புக்களுக்கு(ஆடு மாடு முதலியவைகட்கு)க் கிடையா. பெண்ணாசை புழு முதலிய பிறவிகளுக்குமுண்டு. எனவே பிறவிகள்தோறும் தொடர்ந்து வருவது பெண்ணாசை. இதுவே மிகவும் வலிமையானது. இதைத் துறத்தல் மிகவும் கடினம். திருவருள் துணையால் மட்டுமே தொலையும்.

நமக்கு வருகின்ற துன்பங்கள் பலவற்றுக்கும் பெண்ணாசையே மூல காரணம்.

> தூமகேது புவிக் கெனத் தோன்றிய
> வாம மேகலை மங்கைய ரால்வரும்
> காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
> நாம மில்லை நரகமு மில்லையே.

என்று வசிட்டமுனிவர் இராமருக்கு உபதேசிக்கின்றார்.

> உண்டால் மட்டுமே மயக்கும் கள்.
> கண்டால்—நினைத்தால் மயக்குவது காமம்.
> நஞ்சு உண்டாரைக் கொல்லும்; நரகைத் தராது.
> காமம் குலத்துடன் அழித்து நரகையும் நல்கும்.

காமத்தால் இந்திரனும் சந்திரனும் கெட்டனர்; கீசகனும் இராவணனும் கிம்மீரனனும் மாண்டார்கள்; சுந்தோபசுந்தர்கள் தம்முள் பொருது அழிந்தனர். காமத்தால் நகுடன் மலைப்



பாம்பாக ஆனான். காமங் கொண்டவர் எப்பெரும் பாவமும் செய்யத் துணிவர்.

> கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமும் ஓம்பார்
> களவொன்றோ ஏனையவுஞ் செய்வார்—பழியோடு
> பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்
> காமங் கதுவப்பட் டார். —நீதிநெறிவிளக்கம்.

ஆகவே காமனை எரித்த கனற்கண்ணிலேயிருந்து அருட் பெருஞ் சோதியாக வந்த முருகனை நினைந்து நாரியராசைக்கு விடைதர வேண்டும்.

**ஆரமுதமான சர்க்கரை தேனே ஆன அநுபூதி:—**

அநுபூதி (அநு-தொடர்ச்சி; பூதி - ஆதல்) இறைவனுடன் ஒன்றுபடுதலாகிய அநுபவம் அநுபூதி எனப்படும். அந்த அநுபூதி அமுதினும் சர்க்கரையினும் தேனினும் இனியது. அநுபூதியின்பமுற்றோர்க்குக் கரும்புகசக்கும், தேனும் புளிக்கும்; சர்க்கரை உவர்க்கும்.

நாவுக்குமட்டுமே தித்திப்பவை சர்க்கரையும் தேனும்; உயிரிலே உணர்விலே தித்திப்பது அநுபூதி.

கடவுள் உருவமென்றும், அருவமென்றும், உளது எனவும் இலது எனவும் கூறியுழலுகின்ற கலைகளின் ஆரவாரம் அற்ற இடத்தில் - உரை உணர்வு உள்ளம் உயிர் இவைகள் அவிழ்ந்த இடத்தில் உணர்கின்ற அருளநுபவம் அநுபூதி எனப்படும்.

> "உருவெனவு மருவெனவு முளதெனவு மிலதெனவும்
> உழலுவன பரசமய கலையாரவாரமற
> உரையவிழ உணர்வவிழ உளமவிழ உயிரவிழ
> உளபடியை உணருமவ ரநுபூதி யானதுவும்"
> —சீர்பாத வகுப்பு.

இந்த அநுபூதியைச் சிவபெருமானுக்கும் முருகவேள் உபதேசித்தனர். அந்த அநுபூதியை அடியேனுக்கு உபதேசித் தருள்வீர் என்று அடிகளார் வேண்டுகின்றனர்.

> 'விடைபரவி அயன்மாலொ டமரர்முனி கணமோட
> மிடறடைய விடம்வாரி யருள்நாதன்
> மினலனைய இடைமாது இடமருவு குருநாதன்
> மிகமகிழ அநுபூதி யருள்வோனே'
> — திருப்புகழ்.

**காரணமதான உத்தமசீலா:—**

உலகம் காரியப்பாடுடைத்து; காரணமின்றி காரியம் நிகழாது. பானையை ஒருவன் செய்கின்றான். ஏன் செய்கின்றான்? உணவைச் சமைப்பதற்கு. இது போல் ஒவ்வொரு காரியமும் காரணத்துடனேயே அமைந்துள்ளது.

அகில உலகத்துக்கும் மூலகாரணமாக நின்றவன் முருகன். பானை தானே உண்டாகாது. அதனைக் குயவன் புரிகின்றான். குயவன் நிமித்த காரணன்; தண்ட சக்கரம் துணைக் காரணம்; மண் முதற் காரணம்; உலகம்—பானை; இறைவன்—குயவன்; சக்தி—துணைக்காரணம்.

உலகத்திற்குக் கடவுள் முதற்காரணம் என்பார் கூற்று கூற்று போன்றது. அது பொருந்தாது. இறைவன் கருணையால் இந்த உலகத்தைக் காரியப்படுத்துகின்றான்.

**உத்தம சீலா:—**

முருகன் உத்தமி பாலன்; உத்தம சிலன். 'இமவான் மடந்தை உத்தமிபாலா' என்பார் பிறிதோரிடத்தில். உத்தம குணம் பெற்றார், உத்தமசீலனாகிய முருகனருளைப் பெறுவார்.

**கான குறமாதினைப் புணர்வோனே:—**

கானம்—என்பது தவம். குறமாது—ஆன்மா.

தவமாகிய வனத்தில் வாழ்கின்ற ஆன்மாவைப் பரமான்மா தன்னுடன் அணைத்துக் கொள்ளுகின்றான்.

**சூரர்கிளை தூளேழ போரும் வேலா:—**

சூராதியவுணர்கள் மலமாயா கன்மங்கள். அவர்கள் சுற்றம் காமக்ரோத முதலிய தீய குணங்கள். அவைகளை முருகன் ஞானமாகிய வேலினால் அழிக்கின்றான்.

**தோகைமயில் வாகனப் பெருமாளே:—**

மயில்—விந்து. விந்து விரிந்து விளங்கும்; மயில் ஆடும். அதை தனக்கு வாகனமாகக் கொண்டார்.

### கருத்துரை

**உத்தமதேவரே! வள்ளி மணவாளரே! சூரசங்காரரே! மயில்வாகனரே! பெண்ணாசையைத் துறந்து உமது அடிமலரைத் தியானிக்க இனிய அநுபூதியை அருள்புரிவீர்.**

—★—



### திருப்புகழ்

**தேனியல் சொற் கனிமாதர்-**
**சேவைதனைக் கருதாதே;**
**யானெனதற் றிடுபோதம்-**
**யானறிதற் கருள்வாயே;**
**வானவருக் கரசான-**
**வாசவனுக் கினியோனே;**
**ஆனைமுகற் கிளையோனே-**
**ஆறுமுகப் பெருமாளே.**

### பதவுரை

வானவருக்கு அரசு ஆன - தேவர்கட்கு அதிபனான, வாசவனுக்கு இனியோனே - இந்திரனுக்கு இனிமையானவரே! ஆனைமுகற்கு இளையோனே - யானை முகமுடைய விநாயகருக்குத் தம்பியே! ஆறுமுக பெருமாளே - ஆறுமுகங்களை யுடைய பெருமையின் மிக்கவரே! தேன் இயல் சொல், கனிமாதர் சேவைதனை கருதாதே - தேன் போலே இனிமையாகப் பேசி மயக்கும் விலைமாதர்களுக்குப் பணிவிடை செய்வதை நினையாமல் மறந்து, யான் எனது அற்றிடு போதம்- அகப்பற்று புறப்பற்று அற்ற ஞானத்தை, யான் அறிதற்கு அருள்வாயே - அடியேன் அறிந்துய்யுமாறு உபதேசித்து அருள்புரிவீர்.

### பொழிப்புரை

தேவர்கட்கு இறைவனான இந்திரனுக்கு நண்பரே! விநாயகருடைய தம்பியே! ஆறுமுகங் கொண்ட பெருமிதமுடையவரே! தேன் போன்ற இன் சொல்லையுடைய பொது மாதர்களுடைய தொண்டையே பெரிதாக எண்ணாமல், யான் எனது என்ற இருபற்றுக்களும் அற்ற சிவஞானத்தை அடியேன் அறிந்துய்ய உபதேசித்தருள்புரிவீர்.

### விரிவுரை

**தேனியல் சொல் கனிமாதர்:—**

கனிமாதர்—விலைமாதர்கள். அவர்கள் தேன் போல் பேசி ஆடவரை மயக்குவார்கள். நாவாரவேண்டும் இதம் சொல்லுவர்; உனை நான் பிரிந்தால் சாவேன் எனச் சத்தியம் புகல்வார். கைதான் வரண்டால் போய்வாரும் என்று நடுத்தலையில் குட்டுவர்.

**சேவைதனைக் கருதாதே:—**

அவ்விலைமாதரிடம் அளவற்ற மோகமுற்று, மதிமயங்கி அவரிட்ட வேலையைச் சிரமேற்கொண்டு, அவர் சொல்லை வேத

வாக்காக வுன்னி, அவர் வீட்டை முத்தி வீடாகக் கருதிச் சிலர் உழலுவர்.

“சதிசெய்தவ ரவர்மகிழ அணைமீது ருக்கியர்கள்
வசமொழுகி அவரடிமை எனமாத ரிட்டதொழில்
தனிழுழலு மசடனையு னடியே வழுத்தஅருள் புரிவாயே”
(குமரகுருபர—திருப்புகழ்)

யானெனதற்றிடு போதம்:—

யான் — அகப்பற்று. எனது — புறப்பற்று. இவையற்ற இடத்தில் திருவருள் ஞானம் உண்டாகும்.

பற்று அற்றார்க்கே வீடுபேறு சித்திக்கும். “அற்றது பற்றெனில் உற்றது வீடு” என்பர் நம்மாழ்வார்.

“எனதி யானும்வேறுகி
எவரும் யாதும் யானும்
இதய பாவனுதீதம் அருள்வாயே”

என்கின்றார் பிறிதொருபாடலில் அடிகளார்.

‘யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்.’ —திருக்குறள்.

‘நான் செய்கின்றேன்; என் செயல்’ என்ற எண்ணம் போய், எல்லாம் சிவன் செயல் என்று கருதி, தற்போதமற்று சிவ போதமுற்று சிவமயமாய் நிற்றல்வேண்டும்.

வாசவனுக் கினியோனே:—

வாசவன்—இந்திரன்.

இந்திரன் சீகாழியில் சிவபூஜை செய்தவன்; தெய்வயானையம்மையாரை மகளாகப் பெற்று, திருப்பரங்குன்றிலே முருகவேளுக்குத் திருமணஞ் செய்து தந்தவன். பெரிய சிவபக்தன். அதனுல் முருகன் வாசவனுக்கு இனியவனுக இருக்கின்றான்.

இந்திரர் பலர்; “ஏறு கங்கை மணலெண்ணில் இந்திரர்” என்கின்றார் அப்பர். ஆகவே சீகாழியில் தவஞ்செய்த இந்திரன் வேறு; அகலிகையிடஞ் சென்று சாபமுற்ற இந்திரன் வேறு. இருவரும் ஒருவரேயென்று மயங்கற்க. இந்திர பதவியில்நிற்பவர் பலர். சிவபக்தனுகிய இந்திரன் காமத்தால் கருத்தழியமாட்டான் எனவுணர்க.

கருத்துரை

**இந்திரனுக்கு இனியரே! ஆறுமுகக் கடவுளே! ஆசையையறுத்து, இருவகைப் பற்றும் விலகும்படி சிவஞான போதத்தை அடியேனுக்கு உபதேசித் தருளுவீர்.**



# பெரிய புராணம்

(எ-ம் பக்கத் தொடர்ச்சி)

## கணம்புல்ல நாயனுர் புராணம்

**‘கறைக்கண்டன் கழலடியே காப்புக்கோண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும்.........அடியேன்’**

வட வெள்ளாற்றின் தென் கரையில் **இருக்குவேளூர்** என்று ஒரு தலமுண்டு. சோலையிலுள்ள பலாப்பழங்கள் வெடித்து அதனின்றும் வழியும் தேன் பாய்ந்து வயல் விளையும். அவ்வூரிலே தலைவராய் வாழ்ந்தார் **கணம்புல்ல நாயனுர்.** நிறைந்த செல்வம் உடையவராய், நற்குண சீலராய் அவர் விளங்கினுர். ஈசன் திருவடி ஒன்றே மெய்ப்பொருள் என்று விரும்பி அன்பு செய்வார். “செல்வத்தின் பயன் சிவபெருமான் திருக்கோயிலின் உள்ளே ஒளியுற விளக்கெரித்தலே” என்றுணர்ந்து, திருக்கோயிலில் திருவிளக்கிட்டு, நாவார நம்பனைப் பாடி அன்பு செய்வார்.

அவருக்கு வறுமை வந்து எய்தியது. தேவாதி தேவராம் அம்பலவாணர் எழுந்தருளியுள்ள தில்லையம்பதி சென்றார். சென்று ஆடலரசை யன்புடன் பலகாலும் பணிந்து, தில்லையிலேயே தங்கியிருந்தார். வீட்டில் உள்ள பொருள்களை விற்று விற்று திருப்புலீச்சுரம் என்ற கோயிலில் விளக்கெரித்து வந்தார். விற்பதற்கு வேறு ஒரு பொருளும் இல்லா தொழிந்தது. அயலாரிடம் போய் இரப்பதற்கு அஞ்சினுர். உடல் உழைப்பினுல் அரிந்த கணம்புல்லைக் கொண்டுவந்து விற்று அப்பொருளால் நெய் வாங்கி விளக்கிட்டுத் தொண்டுபுரிந்தார்.

இவ்வாறு தொண்டு புரியும் நாளில் அரிந்து கொண்டு வரும் கணம் புல் எங்கும் விலையாகாது இடர்ப்பட்டனர். அதனுல் அவர் அப்புல்லையே திரித்து விளக்காக எரித்தார். இவ்வாறு தொடர்ந்து செய்தபோது அப்புல் போதாத நிலையுற்றது. கணம்புல்ல நாயனுர் அன்புருகும் சிந்தையுடன் என்புருக அவ்விளக்கில் தலையை வைத்து எரித்தார். உடனே சிவபெருமான் திருவருள் புரிந்து அவருக்குச் சிவலோகம் அருள்புரிந்தார். கணம்புல்ல நாயனுர் திருக்கயிலையில் இறைவரை இறைஞ்சி பேரின்ப நிலையடைந்தார்.

விளக்கம்

கணம்புல்லை யரிந்து தொண்டு செய்ததனுல் இவர் கணம் புல்லர் என்ற பேர் பெற்றனர்.

“விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்”

என்ற அப்பர் திருவாக்கின்படி, திருக்கோயிலில் விளக்கிடுவது மேலான திருத்தொண்டு. இத்தொண்டினை இவர் இடையருது புரிந்து இன்புற்றுர். இரவச்சம் உடையவராய் உடல் உழைத்தே தொண்டு புரிந்தார் என்பதையும் நன்கு உணர்க. யாசகம் புரிந்து தொண்டு புரிவது அத்துணைச் சிறப்புடைய தன்று என்று தெளிக.

தில்லை நகர் மணிமன்றுள் ஆடுகின்ற சேவடிகள்
அல்கிய அன்புட னிறைஞ்சி யமர்கின்றுர் புரமெரித்த
வில்லியார் திருப்புலீச் சரத்தின்கண் விளக் கெரிக்க
இல்லிடையுள் ளனமாறி எரித்துவரும் அந்நாளில்,

ஆயசெயல் மாண்டதற்பின் அயலவர்பால் இரப்பஞ்சிக்
காயமுயற் சியிலரிந்த கணம்புல்லுக் கொடுவந்து
மேயவிலைக் குக்கொடுத்து விலைப்பொருளால் நெய்மாறி
தூயதிரு விளக்கெரித்தார் துளக்கறுமெய்த் தொண்டனர்.

நோவாமல் பொருள் சேர்த்துச் செய்யுந் தொண்டைக் காட்டிலும் உடல் நொந்து உழைத்துப் பொருளீட்டி அது கொண்டு செய்யும் பணி ஒப்பற்ற உயர்வுடையது.

அவ்வாறு செய்த பணிக்கும் இடர் வந்த போது தமது தலையை விளக்கில் வைத்து என்புருக எரித்தார் எனில் இவருடைய அன்பு கடலினும் பெரிதன்றே?

## காரி நாயனர் புராணம்

### "காரிக்கும் அடியேன்"

திருக்கடவூரிலே அவதரித்தவர் **காரி நாயனர்.** அவர் செந்தமிழை நன்கு ஆய்ந்து அறிந்தவர். கவி பாடுவதில் வல்லுநர். இவர் மூவேந்தரிடமுஞ் சென்று, சொல் விளங்கப் பொருள் மறைந்து நிற்கும்படி தமது பெயரால் காரிக்கோவை என்று பாடி உரையும் விளக்குவார். அம்மன்னர்கள் மகிழ்ந்து கொடுத்த பொற்குவியலைக் கொணர்ந்து சிவபெருமானுக்கு பல திருக்கோயில்கள் புதுக்கினுர். எல்லோருக்கும் உள்ளம் உவக்கும்படி இன்சொல்லே கூறுவார். சிவனடியார்கட்கு இருநிதியும் அன்புடன் வழங்குவார். வடகயிலையை மறவாது தியானம் புரிந்துகொண்டிருந்தார்.

யாவர்க்கு மனமுவக்கு மின்பமொழிப் பயனியம்பித்
தேவர்க்கு முதற்றேவர் சீரடியார் எல்லார்க்கும்
மேவுற்ற இருநிதியம் மிகவளித்து விடையவர்தம்
காவுற்ற திருக்கயிலை மறவாத கருத்தினராய்.



உலகமெங்கும் இவர் புகழ் பரவி நிலைநிற்பதாயிற்று. இடையருத கயிலைத் தியானத்தினுல், சிவபெருமான் திருவருள் துணைபுரிய உடம்புடன் கயிலைமலை சேர்ந்து சிவானந்தம் பெற்றுர்.

### விளக்கம்

தீதின்றி வந்த பொருள் சிவாலயத்திற்கும் சிவனடியார்க்குமே வழங்குவது பதி புண்ணியம். ஆலயம் அமைத்தல் நிலையான பணியாகும். இவர் தாம் கற்ற தமிழறிவால் கோவை பாடி அதனுல் வரும் பெரும் பொருள் அத்தனையும் கோயிற் பணிக்கும் அடியார்க்குமே ஆகுமாறு அறம் புரிந்தார்.

'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்'

என்றபடி இடையருத கயிலைத் தியானத்தால் இவர் உடம்புடன் கயிலை யடைந்தார். "வாய்ந்த மனம் போலுடம்பும் வட கயிலை மலை சேர்ந்தார்" என வருவதனுலறிக.

இவ்வுடம்பு ஐம்பூதங்களின் பரிணமம். பிராகிருத உடம்பு. திருக்கயிலை அப்பிராகிருதம். ஐம்பூத சேர்க்கையினுல் ஆகாதது. அப்பிராகிருத கயிலையும் பிராகிருத உடம்புடன் சேரமுடியாது. ஆனுல் இவர் உடம்புடன் சென்றுர் என வருகின்றது. அதன் கருத்து, இவ்வுடம்பொடு சென்றவுடன் இவ்வுடம்பு கற்பூரம் கனலில் மறைவதுபோல் அங்கு மறைந்து விடும் எனவுணர்க.

இவ்வாறு சுவர்க்கத்திற்கு உடம்புடன் தருமர் சென்றுர் என்றும், சென்ற பின் உடம்பு மறைந்து ஒளியுடம்பு பெற்றுர் என்றும் மகாபாரதங் கூறுகின்றது.

## நின்றசீர் நெடுமாற நாயனர் புராணம்

### 'நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்'

மதுரையம்பதியை அரசு புரிந்திருந்தார் **நின்றசீர் நெடுமாற நாயனர்.** மங்கையர்க்கரசியாரை வாழ்க்கைத் துணைவியாக் கொள்ளும் பெரும் பேறு பெற்றவர். இவர் தடுமாறு நெறியைத் தவமென்று கொண்டு உடலை ஒறுக்கும் சமண் வலைப்பட்டு திருஞானசம்பந்தருடைய அருட்பெருங் கருணையால் சைவசமயஞ் சார்ந்து, சைவத்தை வளர்த்து உலகமெங்கும் புகழ் பெற்றுர். தென்னடு முழுவதும் சிவம் பெருக்கி இனிது அரசு புரிந்தார்.

ஒரு சமயம் வடபுலத்துப் பகைமன்னர் திருநெல்வேலியில் வந்து தேர், யானை, புரவி, காலாள் என்ற நால்வகைச் சேனையுடன் போர் தொடுத்தார்கள். நெடுமாறனார் இதனை யறிந்து வீர மிக்க தமது சேனையுடன் சென்று அஞ்சாது அமராடினார். கடும் போர் நிகழ்ந்தது. உதிரவெள்ளம் பெருகியது; சிரமலை குவிந்தது. கவந்தங்கள் நடம்புரிந்தன. பேய்கள் விருந்துண்டன. முடிவில் பகைவர்களாகிய வடநாட்டு மன்னர்கள் தோல்வியுற்றுச் சென்றார்கள். வெற்றி மாலை புனைந்த பாண்டிய மன்னர் ஆலயப்பணி பல புரிந்து அருள் பெருக அரசளித்தார். திருநீற்றின் பெருமையை எங்கும் விளக்கி ஏனோரும் திருநீற்றைப் புனையுமாறு செய்து, பெரும் புகழுடன் நெடுங்காலம் அரசாண்டு சிவபதமடைந்து பேரின்ப மெய்தினார்.

## விளக்கம்

நின்றசீர் நெடுமாறனார் முதலில் சமண சமயம் புகுந்து இடர்ப்பட்டாராயினும், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளால் திருவெண்ணீறு பூசும் பேறு பெற்று, உய்வுபெற்றவர். மங்கையர்க்குத் தனியரசியாகிய வளவர்கோன் பாவையை மனைவியாராகப் பெற்றார் எனில் இவர் தவம் அளவிடற்கரியது. மிகப் பெரும் புண்ணியஞ் செய்தார்க்கே நல்லற மனைவியமையும். அதனினும் மேம்பட்ட வாய்ப்பு யாதுளது?

மக்களிடம் வரிவசூல் புரிந்து ஆள்வதற்காக அரசனிருப்பது நன்றன்று. மக்களை நன்னெறியில் நிறுத்தி அருள் பெருக்குவதற்காகவே அரசன் இருக்கவேண்டும். இவர் பாலறுவாயருடைய பரிபூரண அருளைப் பெற்று சிவநெறியைப் பரப்பி அரசு புரிந்தனர்.

அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் அருளாலே
தென்னாடு சிவம்பெருகச் செங்கோலுய்த் தறமளித்துச்
சொன்னமை நெறிபோற்றிச் சுரர்நகர்கோன் தனைக்கொண்ட
பொன்னார மணிமார்பில் புரவலனார் பொலிகின்றார்.

இவர் வீரம்படைத்த வேந்தராகவும் விளங்கினார். என்பதை நெல்வேலியில் வளைத்த வடநாட்டு மன்னரை எதிர்த்து வென்றமையே விளக்கும். இவர் செய்த திருத் தொண்டின் பெருமை கீழேவரும் திருப்பாடலால் புலப்படுகின்றது.

வளவர்பிரான் திருமகளார் மங்கையருக் கரசியார்
களபமணி முலைதிளைக்குந் தடமார்பில் கவுரியனார்
இளவரவெண் பிறையணிந்தார்க் கேற்றதிருத் தொண்டெல்லாம்
அளவில்புகழ் பெறவிளக்கி அருள்பெருக அரசளித்தார்.



## வாயிலார் நாயனார் புராணம்

தொண்டை நன்னாட்டில் சிறப்புற்று விளங்குவது திருமயிலாப்பூர். கடற்கரையில் செல்வ மிக ஓங்கி மாடமாளிகை நிறைந்து பொலிவது.

வீதி யெங்கும் விழாவணி காளையர்
தூதி யங்குஞ் சுரும்பணி தோகையர்
ஓதி யெங்கும் ஒழியா அணிநிதி
பூதி யெங்கும் புனைமணி மாடங்கள்.

புன்னைமரத்தின்கீழ் உமையம்மை மயிலுருவுடன் பூசித்த அம் மயிலாபுரியில் வேளாளர் குலத்தில் **வாயிலார்** என்ற தபோதனர் அவதரித்தனர்.

இறைவனை ஒருபோதும் மறவாமையாகிய மனக்கோயிலில் இருத்தி, உணர்வு என்னும் விளக்கேற்றி, இடையறாத ஆனந்தம் என்ற திருமுழுக்காட்டி, அன்பு என்ற அமுதை நிவேதித்து, அர்ச்சித்து வழிபட்டுவந்தார்.

மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச் சனைசெய்வார்.

இவ்வாறு அகப்பூசை ஒழியாது நெடுங்காலம் புரிந்து சிவபெருமானுடைய திருவடி நிழலை யடைந்து இன்புற்றார்.

## விளக்கம்

திருமயிலாப்பூரிலே கபாலீச்சுரனார் திருக்கோயிலில் இவருக்கு ஒரு தனிக்கோயிலுண்டு.

வழிபாடு இருவகை. புறவழிபாடு அகவழிபாடு எனப்படும். அகவழிபாடில்லாத புறவழிபாடு பயனில்லாதது. சிவபூஜையில் **அந்தர்யாகம்** எனப்படும். அந்தர்யாகமின்றிச் செய்யும் சிவபூசை சிறப்புறாது.

இவர் அகவழிபாட்டிலேயே மிகவும் அழுந்தி நின்றவர். அதனால் இவரைத் **தபோதனர்** என்கின்றார் சேக்கிழார்சுவாமிகள்.

மனக்கோயிலில் இறைவனை எழுந்தருளப் புரிந்து, உணர்வு விளக்கேற்றி, இன்பு நீராட்டி, அன்பு ஊட்டி வழிபட்டார். இதை இடையறாது செய்தனர். இப்படிச் செய்யும் அகவழிபாட்டைப்பற்றித் தாயுமானார் கூறுகின்றார்.

'நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பு
மஞ்சனநீர் பூஜைகொள்ள வாராய் பராபரமே'

"துள்ளுமறியா மனது பலிகொடுத்தேன் கர்ம
துஷ்டதேவதைகளில்லை
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
தொழும்பன்அன் பபிஷேகநீர்

உள்ளுறையில் என்னுவி நைவேத்தியம் ப்ராணன்
ஓங்குமதி தூபதீபம்
ஒருகால மன்றிது சதாகால பூசையாம்
ஒப்புவித்தேன் கருணைகூர்''

## முனையடுவார் நாயனர் புராணம்

சோழவள நாட்டிலே வயல் சூழ்ந்து செல்வம் நீடிய ஊர் **நீடூர்** என்பது. அத்தலத்தில் வேளாண் மரபில் வந்து அக்குலத்திற்குத் தலைவராய் வாழ்ந்தார் **முனையடுவார் நாயனர்.** அவர் சிவபெருமானிடத்தில் மாருத காதல்கொண்டு உள்ளம் உருகி வெள்ளம்போல் கண்ணீர் பெருகி வழிபடுவார். அன்பு நெறி நின்ற அவர் வீரஞ் செறிந்து விளங்கினர். மாற்ருரை எதிர்த்துப் போர்புரிந்து வெல்லவல்லவர். பகைவர்கட்குத் தோற்றவர் இவர்பால் வந்து வேண்டி நிற்பர். நடுவு நிலையுடன் அவர்பால் நிதிபெற்று பகைவரை எதிர்த்துவெற்றிபெறுவார். இந்த வகையில் வந்த பொன்கொண்டு அடியார்க்கு வழங்கி திருத்தொண்டு புரிந்தார். அடியார்க்கு அறுசுவை யுண்டி அளித்து இன்புறுவார்.

இன்ன வகையால் பெற்றநிதி எல்லாம் ஈச னடியார்கள்
சொன்ன சொன்ன படிநிரம்பக் கொடுத்துத் தூய போனகமும்
கன்னல் நறுநெய் கறிதயிர்பால் கனியுள் ளுறுத்த கலந்தளித்து
மன்னும் அன்பில் நெறிபிறழா வழித்தொண் டாற்றி வைகினர்.

இவ்வாறு நெடுநாள் சிவத்தொண்டு புரிந்து சைவநெறி நின்று சிவலோக மடைந்து ஆரா அமுதாம் பேராப் பெரு வாழ்வு பெற்றுர்.

### விளக்கம்

முனை—போர். பல முனைகளுக்குச் சென்று பகைவரை வென்றதனல் இவர் **முனையடுவார்** எனப் பேர்பெற்றனர்.

முனைமுகத்து நினைத்தற் கரிய வீரமுடன் மாற்றலரை எதிர்த்துக் கடும் போர் புரியும் வீரராகிய இவர் அதனல் வரும் பெரும் பொருள் அத்தனையும் அடியவர் பணியில் செலவிட்டு மகிழ்வார். மிக்க வலிமையாளரையும் எதிர்ப்பார் என்பதனை, "கூற்று மொதுங்கும் ஆள் வினையால்" என்று வருவதால் அறிக.

முனை என்பது போர் என்ற பொருளில் "முனை முகத்து நில்லேல்" என்றும், "முனையழிந்தது மேட்டி குலைந்தது" என்றும் வருகின்ற இடங்களால் அறிக.

உயிரைத் துரும்பாக எண்ணிப் போர் புரிந்து அதனல் வரும் நிதியை அள்ளி வழங்கும் வள்ளன்மை மிகவும் போற்றுதற் குரியது.

உ
முருகா

# பாம்பன்-ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் வரலாறு

பாம்பன் குமரகுருதாச அடிகளார் முருகவேளைக் கனவிலும் நனவிலும் கண்டவர். கலைஞானம் அநுபவஞானம் என்ற இரண்டு ஞானங்களையும் பெற்றவர். முருகப் பெருமானிடத்திலே அளவற்ற காதல் பூண்டவர். இடையருது இறைவனை வேண்டி தவம்புரிந்த தபோதனர். 'அண்மையிலே வாழ்ந்த உண்மைத் துறவியார். முருகப்பெருமான் ஒருவரையே பாடி பரமபதிவிரத நிலையை உலகிற்குக் காட்டிய உத்தம வித்தகர். 6666 என்ற எண்வரை முருகனைப் பாடி, பின்னர் உரை நடையில் பல நூல்கள் எழுதியவர். ஆறு என்ற எண்ணில் அத்தனை அன்புகொண்டவர். அருணகிரி நாதரிடத்தில் அன்புகொண்டு, தாம் பாடிய பதிகங்களின் இறுதியில் நியதியாக அருணகிரிநாதரை வைத்துப் பாடிய அருந்தவமூர்த்தி. ஆரவாரம் கூடாது என ஒதுங்கி வாழ்ந்து இறைவனடி சார்ந்தவர்.

இவருடைய பெருமை இமயமலையினும் விழுமியது. அடியேனுக்குத் தெளிவும் துணிவும் அடிகளாருடைய நூல்களைப் படித்ததனுல் பிறந்தன. சுருங்கச் சொன்னல் சுவாமிகளை **இரண்டாவது அருணகிரிநாதர்** என்று கூறவேண்டும்.

மூவாசையின்றி வாழ்ந்து தமிழுக்கும் ஏழைகட்கும் தொண்டுபுரிந்த **திரு. வி. க** அவர்களும், இன்று சைவம் வாழ வாழ்கின்ற திரு. **சச்சிதானந்தம்பிள்ளை** யவர்களும் அடிகளாருடைய சீடர்கள். அடிகளார் சைவசமயத்திற்கு வைரத் தூணைக விளங்கியவர்கள். சைவசமய சரபம் என்ற நூலை எழுதியவர். "அத்யாச்சிரம சுத்தாத்வைத வைதிக சைவசித்தாந்த ஞான பாநு" என அறிஞர்கள் அடிகளாரைப் புகழ்ந்தும் போற்றியும் உய்ந்தார்கள். ஆகவே அடிகளாருடைய வரலாற்றை அன்பர்கள் அனைவரும் அறிந்து உய்யும் பொருட்டு எழுதுகின்றேன்.

பாம்பனெனும் பதிமுளைத்த பவளக் குன்றே
பழம்பாண்டித் தமிழ்ப்பொழிலே பண்பா ரில்லத்
தீம்பயிரே அன்புமொழி திரையே தெய்வத்
திறங்கண்ட அறநிலையே செகத்தி லுற்ற
கூம்பலற எழுகதிரே குழந்தை வேலன்
குகனெறியே நெறியென்ற குருவே நீதி
ஓம்புதலென் றுரைத்தொழுகி உலகில் வாழ்ந்த
உயர்குமர குருதாச ஒளியே போற்றி.

—திரு. வி. க.

## அடிகளாரது அவதாரமும் இளமையும்

பாண்டிநாடு தொன்மையும் நன்மையு முடையது; முத்தும் முத்தமிழுந் தந்த உத்தம நாடு. தடாதகையாராக அம்பிகை அவதரித்து அரசுபுரிந்தார் எனின் அதன் பெருமையை அள விட வல்லார் எவர்? இத்தகைய பாண்டி நாட்டில் திரு இராமேச்சுரத்தைச் சேர்ந்தது **பாம்பன்.** அப்பதியிலே சிவாலய அகத்திருப்பணி வேளாளர் குலத்திலே **சாத்தப்பப் பிள்ளை** என்பார் ஒருவர் இருந்தார். அவர் அறநெறி நின்றவர். அவருடைய வாழ்க்கைத் துணைவியார் **செங்கமல அம்மையார்.** இவ்விருவரும் செய்த அரும்பெருந் தவத்தால் (1850-க்கும் 1852-க்கும் இடையில் உள்ள) ஒரு வெள்ளிக்கிழமை கதிரவன் உதிக்கும்பொழுது அடிகளார் அவதரித்தனர்.

இவருக்குத் தாய்தந்தையர் இட்ட பிள்ளைத் திருநாமம் **அப்பாவு** என்பது. தமிழாசிரியர் முனியாண்டியா பிள்ளை என்பார் இவருக்குத் தமிழ் பயிற்றுவித்தார்.

இவர் அவ்வூரிலுள்ள கிறிஸ்தவ கலாசாலையை யடைந்து படித்துவரும்போது தமிழ் பரிட்சையில் தேறினமை கண்டு, ஆசிரியர் தேவசகாயம் பிள்ளை பல பரிசுகள் வழங்கினர். அப்பொழுது அடிகளாருக்குச் சற்று முன்பின் பதினான்கு வயது.

கலாசாலையில் படிக்குங்காலத்தில் முகம்மதியர் கோயிலை யும் கிறிஸ்தவர் கோயிலையுங் கண்டால் வணங்கிச் செல்வார். அவைகளிலும் இறைவன் உறைகின்றான் என்று கருதினர்.

## சோதிடர் சந்திப்பு

அறவொழுக்கத்தில் சிறந்திருந்த இவர் ஐந்தாறு சிறுவர் களுடன் குந்துகால் என்னும் இடத்தை யடைந்து, அங்கு வீழ்ந்து கிடந்த ஒரு தென்னை மரத்தின்மீது அமர்ந்திருந்த னர். இலங்கைக்குச் செல்பவரோடு வந்திருந்த ஒரு சோதி டர், இச் சிறுவர்களுடன் கலந்து பேசினார். அவரைச் சோதி டர் என அறிந்த சிறுவர்கள் தத்தம் கரத்தை நீட்டிச் சோதி டங் கேட்டனர். அவர் அவர்கள் கரத்தைப் பார்த்து சிறப் புடைய தன்மையில்லை யென்று கூறினார். முடிவில் அடிகளா ருடைய கரத்தைப் பார்த்து அதிசயித்து, அவருடைய நாவை யும் நீட்டச் சொல்லிக் கண்டு. "தம்பி! நீ ஒரு பெரிய புலவ னாவாய்; உன் வாக்கு பலிதமுள்ள வாக்காக அமையும்; புக ழுடையவனாக விளங்குவாய்; உன் பெருமை நிலைத்து நிற்கும்" என்று கூறினார். இதனைச் சிறுவர் கூற அன்னை கேட்டு அகமகிழ்ந்தனர்.



## ஒரு அற்புதக் காட்சி

அடிகளார் ஒரு நாள் பாடசாலைக்குச் சென்றுகொண் டிருந்தார். முகம்மதியருடைய மசூதிக்கருகே போகும் பொழுது, ஆகாயத்திலே தங்க மயமான அரசிலைகள் பல வரிசை வரிசையாக வடக்கு நோக்கிச் செல்வதைக் கண் ணுற்று அதிசயித்தார். "தேவரதம் செல்லுகின்றது போலும்" என்று எண்ணி சிறிது நேரம் அங்கு நின்று வணங் கிச் சென்றார்.

நாகநாதர் கோயிலில் நிகழும் நல்விழாவைக் காணும் பொருட்டு தம்மோடொத்த இளைஞர்களுடன் தோணியில் சென்றுகொண்டிருந்தார். நாகநாதர் கோயில் என்பது ராம நாதபுரம் அரசாங்கத்தைச் சார்ந்தது. **"நயினார் கோயில்"** என்று வழங்குகின்ற வரதமான தலம். அத்தோணியில் இரு சந்யாசி களும் பிரயாணம் புரிந்தனர். தோணி கடலில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. அச் சந்யாசிகள் இருவருள் ஒரு வர் "சிவ சிவ" என்று விடாது தொடர்ந்து சொல்லிக்கொண் டிருந்தனர். அடிகளார் அதைக் கண்டு தாமும் அவ்வாறே இரவும் பகலும் ஒழியாமல் "சிவ சிவ" என்று செபித்துக் கொண்டே யிருந்தனர். நாகநாதரைச் சேவித்து வீடு வந்து சேர்ந்த பின்னரும் அம் மந்திரத்தைத் தொடர்ந்து மூன்று நாள் ஓதிக்கொண்டே யிருந்தனர்.

பின்னர் முருகக் கடவுள் துதி நூல் ஒன்று கிடைக்குமோ என்று கருதி புத்தகக் கடையை யடைந்து சஷ்டி கவசத்தை வாங்கி, அதிற் கண்டவாறு நாள் ஒன்றுக்கு முப்பத்தாறு முறை பாராயணஞ் செய்தனர்.

கலாசாலையை விட்ட பிறகு சிலம்பகம், மற்பிடி, நீந்து தல், சித்திரம் எழுதல், மலர் தொடுத்தல், தையல் முதலிய வைகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்றனர். நல்ல உடல் வள முடையராய் இருந்தார்.

## பாடத் தொடங்குதல்

அன்று வெள்ளிக்கிழமை; அதிகாலை. தென்னந் தோப் புக்களைப் பார்வையிடும்பொருட்டு கிழத்திசை நோக்கிச் சென் றனர். முதற்கணுள்ள தோப்பு வாயிலில் நுழைந்தார். அங்கு முன்னரேயே தந்தையார் வந்திருப்பதை யறிந்த இவர் வாயிலி லியே நின்றுவிட்டார். கையிலிருந்த சஷ்டி கவசத்தை யெடுத்து இதனைப் பாடியோர் யாவர்? எனக் கவனித்தார். தேவராய சுவாமிகள் என அறிந்தார். இவ்வாறு ஆண்டவனை அடியேனும் பாடுதல் வேண்டும் என்னுந் துணிவு துண் ணெனத் தோன்றியது.

உடனே வடக்குமுகமாக நோக்கி நின்று செவ்வேளைச் சிந்தித்து வந்தித்தார். அங்கு கிடந்த ஒரு பனையோலையை எடுத்து, தமது அரையில் செருகியுள்ள வெள்ளிப் பூக்களிட்ட தந்த எழுத்தாணியை எடுத்து வகிர்ந்து ஏடாகத் திருத்தினார். பின்னர் கிழக்கே திரும்பினர். அப்பொழுது கதிரவன் உதயமாகிக்கொண்டிருந்தான். இது நல்ல வேளை யென்று எண்ணினர். "என்னுண்டவனுகிய குமாரக்கடவுளே! நின்னையே பல பாக்களாலும் பாடக்கடவேன். அருணகிரிநாதருடைய பெயரை வைத்தே பிரபந்தத்தை முடிக்கக் கடவேன். அவருடைய வாக்குபோல் அடியேனுக்கும் வாக்கு உண்டாக வேண்டும்" என்று சிந்தித்துக் கைகூப்பி நின்றார். உடனே அவரை யறியாமலேயே அவர் வாக்கில் "கங்கையைச் சடையிற் பரித்து" என எழுந்தது. அம் மங்கல மொழித் தொடரைத் தொடக்கமாகக் கொண்டு அடியில் வரும் பாடலைப் பாடினர்.

கங்கையைச் சடையிற் பரித்துமறி மழுவங்
கரத்திற் றரித்து ருத்ரங்
காட்டுமுவை யதளசைத் தணிமன்றி லாடுகங்
காளற் கபின்னமாய

சங்கரி சடாதாரி சருவாணி கல்யாணி
தற்பரி பவானி தந்த
தந்திமுக னேடுமற் றைந்துபெயர் நீர்மையுந்
தன்னகத் துளதெய்வமே

மங்கையர்த மின்பமெனுந் துன்பினை விரும்புமட
மார்க்கத்தை விட்டதீதர்
வாழ்வுக்கும் வாழ்வாய வாழ்வினை யளிக்குமுன்
மலரடி தியானிக்கவும்

அங்கையினில் நெல்லியங் கனியெனத் திருவருளை
அடையவுங் கருணைநல்காய்
அருமறை புகழ்ந்ததிரு முருகசிவ சரவணத்
தாதியே அமரர் கோவே.

இவ்வாறு பாடிய பாடலைப் பெருமான் திருமுன் படிப்பது போல், உரத்த குரலில் படித்து, "இறைவ! இதனை ஒப்புக் கொள்ளவேண்டும்" என்றார். இம்முதற் பாடலிலேயே நடையழகு, தொடையழகு, பொருளாழம், துறவு நோக்கம், அருட்பேறு முதலியன விளங்குவதை அன்பர்கள் கண்டு தெளிக. நூறுபாடல் முடியும்வரை நாள்தோறும் உண்பதன் முன் ஒவ்வொரு பாடல் பாடுவேன் என்ற நியதியை மேற் கொண்டார். அது முதல் சஷ்டிகவசம் படிப்பது நின்று விட்டது. இவ்வரலாறு குமார சுவாமியம் என்ற நூலில்



திருவருட் செயல் ஞாபகத்தில் அடிகளாரே கூறியிருக்கின்றனர்.

## சடக்கர உபதேசம்

பின்னர் பிதாவின் கட்டளைப்படி நெல் வியாபாரம் புரிந்தனர். விற்பனைப் பணப்பெட்டியின் மீது சிவப்பு மையால் எழுதிய அந்த நூறு பாடல் கொண்ட நூல் இருந்தது. இராமேச்சுரம் சேதுமாதவப் பெருமாள் கோயில் அர்ச்சகரும், முருகபக்தரும், வடமொழி தென்மொழியில் வல்லவருமாகிய **சேதுமாதவ ஐயர்** என்பவர் அங்கு வந்தார். இவரைப் பார்த்து "இராமேச்சுரத்தில் இன்னர் மருகனு நீ?" என்று வினவினர். (தாயார் பிறந்தவூர் இராமேச்சுரம்) இவர் 'ஆம்' என்றார். அங்கிருந்த நூலை எடுத்துப் படித்துப்பார்த்து "இது புதிது போலும்; யார் பாடியது?" என்று கேட்டார். அடிகளார் "அடியேன் பாடியது" என்றார். அவர் அதைக் கொண்டு போய் இராமேச்சுரத்திலிருக்கும் புதுக்கோட்டை வித்வான் குமாரசுவாமியென்பாரிடம் காட்டினர். அவர் அதனைப் பார்வையிட்டு மகிழ்ந்தார். இருவரும் இரண்டு சாற்றுக் கவிகள் பாடியனுப்பினர்கள்.

பின்னொரு நாள் சேது மாதவ ஐயர் பாம்பன் வந்து அடிகளாரைக் கண்டு, "நாளை விஜயதசமி; இன்று மாலையே என் வீட்டுக்கு வா" என்று அழைத்துச் சென்றார். அடிகளார் அவர் வீட்டிற்குச் சென்று அவர் சொற்படி அங்கு தங்கினர். மறுநாள் ஐயர் அடிகளாரை எழுப்பி அக்கினி தீர்த்தமாகிய கடலில் மும்முறை முழுகச் செய்தார். அடிகளார் நீறணிந்து அவர்முன் நின்றார். அப்பொழுது சூரிய உதயம் ஆகிக் கொண்டிருந்தது. சேது மாதவ ஐயர் அடிகளாருக்கு சுப்ரமண்ய சடக்கர மந்திரத்தை உபதேசித்தருளினர். அடிகளார் அவரை வணங்கித் திருநீறு பெற்றுப் பூசி மகிழ்ந்தார்.

"பாடலோர் சத மாயபின் தேவைப்
பனவன் மாதவன் சயதச மியிலுன்
பீடரு மனு நல்களன் னிதயம்
பிடித்த துங்குக நினதரு ளன்றே"

அன்று மாலை ஐயரவர்கள் அடிகளாரை வடமொழி கற்கு மாறும், வேறு மந்திரங்களைச் செபிக்கொணுது என்றுங் கட்டளை யிட்டார். இவர் அதுமுதல் விஷ பரிகார மந்திரம், கட்டி கரைக்கு மந்திரம் ஆகிய இவற்றை உடனே விட்டு விட்டனர்.

இராமேச்சுரம் சிவாலயத்துக்குப் பன்முறையுஞ் சென்று தொழுவார்; வெள்ளிக்கிழமைதோறும் பர்வதவர்த்தனி

யம்மையின் உத்சவத்தைக் குமாரக் கடவுள் உத்சவமாகக் கருதி சேவித்துவந்தார். முருகன் பெருமையைப் பலருக்கும் போதித்து மகிழ்வார். இவர் முருகவேளுடைய பெருமையைப் பேசாத நாளே கிடையாது. ஏழைகளுக்கும் ஈசனடியார்கட்கும் தம்மாலான உதவியைப் புரிந்து வந்தார்.

பாம்பனின் குளக்கரை, கடற்கரையில் வெண்மணலில் இராக் காலங்களில் தனித்திருந்து, முருகவேளைத் தியானிப்பார். "என்னப்பனே! எளியேனுக்கு எப்போது விடுதலை ஏற்படும்? அருள்செய்" என்று விண்ணப்பம் புரிவார்; சில பாடல்களை அப்போது பாடியருளினர்.

இவருடைய ஆசிரியர் முனியாண்டியா பிள்ளை இவர் கவி பாடுதலை யறிந்து, "அப்பாவு! நான் பூசிக்கும் முனீசுரன் மீது சில பாடல்களைப் பாடிக் கொடு" என்று கேட்டனர். இவர் "முருகவேளை யன்றி வேறு ஒரு பொருளை யான் பாடேன்" என்றார். அவர் "முருகனைக் கருதிப் பாடுக" என்று வேண்டினர்.

அவ்வாறே அடிகளார் நான்கு பாடல் சந்த முடையதாகப் பாடியருளினர். அப்பாடலைப் படித்த அவ்வூரவர் இவருடைய வாக்கின் வன்மையை யறிந்து வியந்து பாராட்டினார்கள்.

## ஒரு அரிய கனவு

ஒருநாள் அடிகளாருடைய கனவில் ஒரு அழகிய சைவரொருவர் தோன்றி, ஒன்று ஒன்றரை மைல் வரை இவரை அழைத்துச் சென்று, ஒரு கட்டிடத்தில் நுழைந்து, வாழையிலையில் அன்னமும் பாலும் பிசைந்து இனிப்புடைய அவ்வுணவை "அன்ப! என்னோடு இதனை நீ உண்க" என்று கட்டளையிட்டனர். அடிகளார் அவருடன் சேர்ந்து அவ்வுணவையுண்டனர். பின்னர் அவர் "நீ இருப்பிடஞ் செல்லுதி" என்று கூறிவிட்டுச் சென்றனர்.

இக் கனவுக்குப் பின் பாடும் வன்மையும் நூலாராய்ச்சியும் அதிகரித்தன. இதனை அடிகளாரே திருவருட் செயல் ஞாபகத்தில் கூறியுள்ளார்கள்.

"வனப்பு மிக்கவொர் சைவ ரென்கனவில்
வந்தெனைக் கொடுபோய்ப்பய சடிசில்
இனிப்புறப் பிசைந் தனரதை யென்னோ
டினிதருந்தியும் ஏகினர் அதுதொட்
டுனைப்பழிச்சிடு கவிதையும் நூலோ
டுணர்வும் வளர்ந்தன இவையு முன்னருளே"

(தொடரும்)



# கற்பு

## கமலாம்பாள்

"கமலாம்பாளை கிருஷ்ணசாமிக்குத்தான் தரவேணும்; கிருஷ்ணசாமி நல்ல அழகன்; B. A. படித்திருக்கின்றான். நீங்கள் ஒன்றும் யோசிக்கவேண்டாம். படித்த பையன். எங்காவது நல்ல வேலை கிடைத்துவிட்டால் சௌக்யமாக இருப்பார்கள். கௌரவமாகவும் இருக்கும். எனக்குப் பிடித்த பையன்" என்றாள் நீலாம்பாள்.

விஸ்வநாதன், "பெண்ணே! நன்றாகச் சிந்தித்துச் செய்ய வேண்டிய விஷயம் இது. ஆயிரங்காலத்துப் பயிர். அவசரப்படக்கூடாது. கிருஷ்ணசாமிக்கு வேலையில்லை. இந்தக் காலத்தில் வேலை கிடைப்பது கடினம். B.A. என்று மயங்கிவிடக் கூடாது. படிப்பைவிடப் பண்பாடு பெரியது. அழகைவிட அன்புடைமை உயர்ந்தது. தவிர அவன் பெரிய செலவாளி என்று கேள்வி. சிகரெட்டுக்கே தினம் ஒண்ணரை ரூபாயாகுமாம். தாய் தந்தையரிடம் அடங்கி நடப்பதில்லை. பெற்று வளர்த்தவர்களையே மதியாதவன் நம்மை மதிப்பானா? குழந்தையை நன்றாக நடத்துவானா? ஆகவே அவனுக்குத் தருவதில் எனக்கு விருப்பமில்லை" என்றான்.

நீலாம்பாள், "கிருஷ்ணசாமி நல்ல பையன் என்று கேள்விப்படுகின்றேன். இளமை வேகத்தில் ஒருவேளை ஏதாவது சிறு குற்றங்கள் இருக்கலாம். போகப்போக எல்லாம் சரியாகிவிடும். குழந்தை கமலா அவனையே கல்யாணம் செய்து கொள்ளவேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கின்றனள். இந்தக் காலத்தில் பிள்ளைகள் இஷ்டத்திற்கு விட்டுவிட வேண்டியதுதான்" என்றாள்.

விஸ்வநாதன், "பெண்ணே! சிறுபிள்ளைத்தனமாகப் பேசாதே. அவசரப்பட்டு முடிவு கட்டாதே. அழகு முக்கியமல்ல; குணந்தான் முக்கியம். என் பெரியப்பாவின் மகளுடைய மகன் கதிரேசன் கிராமத்தில் இருக்கிறான். நான்கு காணி நிலம் வைத்து உழுது பயிரிட்டு உண்டு மகிழ்ச்சியாக இருக்கின்றான். கிராமத்துப் பையன் என்று எண்ணாதே. மிகவும் நல்லவன். அடக்கமானவன். சற்று கருப்பாக இருந்தாலும் களையாக இருக்கின்றான். ஆகவே நமது கமலாவை அவனுக்குக் கல்யாணஞ் செய்து கொடுக்கலாம்" என்றான்.

நீலாம்பாள் சற்று உரத்த குரலில் பேசலானாள். "உங்களுக்குக் கொஞ்சங்கூட யோசனையில்லை. பஞ்சவர்ணக் கிளியைப் பூனையிடம் கொடுப்பதுபோல் இருக்கின்றது. ஏன் இப்படி

உங்களுக்குப் புத்தி போகின்றது. கருப்புப் பையன்; அதுவும் பட்டிக்காட்டான். அவனுக்குப் பெண்ணைக் கொடுப்பதை விடக் கிணற்றிலாவது தள்ளுவேன். என் மாணிக்கம் அவனை மணந்து எருமை மாடு மேய்த்து எருமுட்டை தட்டுவதா? வேண்டாம்; வேண்டாம். கிருஷ்ணசாமி நல்ல சிவப்பு, B. A. உத்யோகம் பார்ப்பான். பட்டணத்திலேயே இருப்பான். அடிக்கடி பெண்ணைப் பார்க்கலாம். என் பேச்சைக் கேளுங்கள். நான் குழந்தையின் க்ஷேமத்தைக் கவனிக்காமலா பேசுகின்றேன். பேசாமல் கிருஷ்ணசாமிக்குக் கொடுத்து விடலாம்'' என்ருள்.

"பெண்ணே! இந்தா! என் பேச்சைக் கவனமாகக் கேள். அழகாக இருக்கின்ருன் என்றும், படித்தவன் என்றும் எண்ணுதே. சிவப்பாகவும் அழகாகவும் உள்ள எட்டிப் பழத்தை உண்ணலாமா? முள்ளு முள்ளாக இருக்கும் பலாப் பழத்தைத் தள்ளலாமா? கருப்பாக இருக்கும் நாவல் பழத்தையும் கோணலாக இருக்கும் வெள்ளரிப் பிஞ்சையும் வெறுக்கலாமா? கோணலின்றி நீளமாக இருக்கும் நாகப்பாம்பை உறவு கொள்ளலாமா? அன்றியும் பண்பாடில்லாத படிப்பினுல் பயனில்லை. எனவே வெளித் தோற்றத்தை மட்டும் கவனிக்கக் கூடாது. உள்ளேயும் நுழைந்து பார்க்கவேண்டும். பெண் புத்தி பின் புத்தி யென்பது உன் பேச்சினுல் நன்ருக விளங்குகின்றது. ஆழ்ந்து சிந்தித்து ஒரு காரியத்தை முடிவு செய்யவேண்டாமா? கமலா சின்ன குழந்தை. அவளுக்கு உலக அநுபவம் போதாது. நீயும் அவளுடன் சேர்ந்து கொண்டு கூத்தடிக்கலாமா? ஆகவே நமது கமலாவை நான் குறிப்பிட்டபடி கதிரேசனுக்குக் கல்யாணம் செய்துகொடுக்கலாம்'' என்ருன்.

நீலாம்பாள், " நீங்கள் இப்படி சாமர்த்தியமாகப் பேசக் கூடாது. சுத்த பழைய பஞ்சாங்கமாக இருக்கின்றீரே. ஆரஞ்சுப் பழம் மஞ்சளாகவும் அழகாகவும் சுவையாகவும் இல்லையா? அழகாக இருக்கின்றவர்கள் எல்லோரும் கெட்டவர்களா? நீங்களும் சிவப்பாகத்தானே இருக்கின்றீர். நீர் எட்டிப் பழமா? இப்படிப் பேசினுல் பேச்சுக்கு முடிவே கிடையாது. வயதுக்குவந்த பெண்; அதிலும் படித்த பெண். அதன் விருப்பம்போல் செய்வதுதான் கடமையும் நன்மையுமாகும். இது பழைய காலம் மாதிரி யன்று. காலம் வரவர எவ்வளவோ மாறுபட்டுக் கொண்டே வருகின்றது. உங்கள் பெரியப்பா மகளுடைய மகனுக்குப் பெண் தர நான் நிச்சயமாகச் சம்மதிக்க மாட்டேன். கட்டாயம் கிருஷ்ணசாமிக்கு முடித்துவிடவேண்டியதுதான்'' என்று பிடிவாதமாகவும் அழுத்தந் திருத்தமாகவும் ஓங்கிப் பேசினுள்.

விஸ்வநாதன் என்ன செய்வான். சத்தி ஓங்கிப் பேசினுல் சிவம் அடங்கிவிட வேண்டியதுதானே. "சரி உன்னிஷ்டம். பிறகு வந்ததைப் படு. விதி யாரை விட்டது. எப்படியாவது போங்கள்'' என்று சலிப்புடன் ஒப்புக்கொண்டான்.



கிருஷ்ணசாமியின் தகப்பனும் விஸ்வநாதனும் திருமண விஷயமாகப் பேசி ஒருவாறு முடிவு செய்தார்கள். B. A. படித்திருப்பதால் பையனுக்கு ரொக்கமாக ரூ. 10,000 தரவேண்டு மென்றும், பாத்திரம் பண்டம் சீர் சிறப்பு முதலியவை ரூ.5000க்கு செய்யவேண்டும் என்றும்,பெண் வீட்டிலேயே கல்யாணம் பெண் வீட்டார் செலவில் நடக்கவேண்டும் என்றும் முடிவு செய்தார்கள்.

குறிப்பிட்ட நாளில் **கிருஷ்ணசாமிக்கும் கமலாவுக்கும்** திருமணம் சிறப்பாக நிகழ்ந்தது. மாப்பிள்ளை வீட்டார் மிகவும் முறுக்காகவும் டம்பமாகவும் நடந்து கொண்டார்கள். காபியில் பால் காணுதென்றும், நேரம் தவறி விட்டதென்றும், நெய் சுகமில்லையென்றும் இப்படிச் சில்லரையாகக் குறை கூறினுர்கள்.

கடன் பட்டுக் கல்யாணம் செய்கின்ற விஸ்வநாதனுக்கு சம்பந்திகளின் சொல்லம்பு நெஞ்சைப் பிளந்தது. எப்படியோ சுமுகமாகக் காரியம் முடிந்தால் சரி என்று எண்ணி ஒன்றும் பேசாமல் அலுவல்களைப் பார்த்தான். வந்தவர்களை உபசரித்தான்.

கல்யாண அலுப்பு தீர்வதற்குள் சாந்தி கல்யாணத்திற்கு ஏற்பாடாயிற்று. "வைர மோதிரம் போட்டால்தான் சாந்தி கல்யாணம் செய்துகொள்வேன்'' என்று பிடிவாதம் பிடித்தான் மாப்பிள்ளை கிருஷ்ணசாமி. விஸ்வநாதன் என்ன செய்வான். கிணறு வெட்டப்போய் பூதம் புறப்பட்டது போல இருந்தது. கல்யாணத்திற்குப் பட்ட கடனே தீரவில்லை. அதற்குள் வைர மோதிரத்திற்கு எங்கே போய் கடன் வாங்குவான். பாவம்! ஆந்தைபோல் விழித்தான்.

அவன் மனைவி நீலாம்பாள் கணவனை நோக்கி, "என் இப்படி விழிக்கின்றீர். செலவு வந்த போது செய்துதானே ஆகவேணும். மாப்பிள்ளை B.A. அவர் தகுதிக்குத் தக்கவாறு செய்யவேண்டாமா? சமயசந்தர்ப்பம் வந்தபோது செலவுக்கு அஞ்சலாமா? அடிக்கடியா சாந்தி கல்யாணம் நடக்கப் போகின்றது? வருடா வருடம் நடக்கின்ற ஆண்டு விழாவா இது? ஆயுளிலேயே ஒருமுறைதானே. என்னமோ சிரமப்பட்டு வாங்கிக் கொடுங்கள். சந்தோஷமாக நடக்கட்டும்'' என்று மூச்சுவிடாமல் பேசினுள்.

மறுபடியும் வெகு பாடுபட்டு ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கி மூன்றுகல் வைர மோதிரம் செய்து, கட்டில் மெத்தை தலையணை முதலியன வாங்கி சாந்தி கல்யாணத்தை முடித்தான். எல்லாம் திருப்தியாக முடிந்தது என்று விஸ்வநாதன் எண்ணி

ஞன். கிருஷ்ணமூர்த்தி வைர மோதிரம் பெரியதாக இல்லையென்றும், மெத்தை தலையணை வெல்வெட்டுத் துணியால் தைக்கவில்லை யென்றும், வேட்டி பெரிய சரிகைக்கரை யில்லையென்றும் தன் மனைவியிடம் மாமனாரை நிந்தித்து, அவைகளை அணிந்துகொள்ளவில்லை. அதனை யறிந்து விஸ்வநாதன் அளவற்ற வேதனையடைந்தான்.

மாப்பிள்ளை கிருஷ்ணசாமி வேலை தேடிக்கொள்ள விரும்பினனில்லை. சட்டதிட்டமாகத் தூங்குவதும், அதிகாலை 8 மணிக்கு விழித்ததும் வாயைக்கூட கொப்பளிக்காமல் காபி குடிப்பதும், நண்பர்களுடன் சீட்டாடுவதும், 11 மணிக்கு 2 வகை கறிகளுடன் உண்பதும், பகலில் படுத்து உறங்குவதும், மாலையில் உலாவி வருவதும், இரவில் 7 மணிக்குள் உணவு செய்வதும், பால் குடித்து 9 மணிக்குள் படுப்பதும், மனைவியுடன் அரட்டை யடிப்பதுமாக இருந்தான். இப்படியிருந்தால் குடும்பம் எப்படி நடக்கும். சீதனமாகப் பெற்ற ரொக்கம் முழுவதும் காலியாயிற்று; கமலாவுடைய நகைகளை ஒவ்வொன்ருகக் காலி பண்ணத் தொடங்கினன். குந்திச் சாப்பிட்டால் குன்றும் மடியுமல்லவா? இப்படியாக, இரண்டு மூன்று ஆண்டுகள் அகன்றன. எல்லாம் காலியாயின. அதற்குமேல் மனைவியைப் பார்த்து, "ஏ! தரித்திரமே! உன் அப்பனிடம் போய் பணம் வாங்கிவா? எத்தனையோ தனவந்தர்கள் பெண் கொடுக்கின்றேன் என்ருர்கள். அப்படி செய்து கொண்டிருந்தால், கார் பங்களா எல்லாம் கிடைத்திருக்கும். சனியன்போலே நீ வந்து சேர்ந்தாய். மண்டையை உடைப்பேன். போய் அந்த மடப்பயலைக் கேட்டுப் பணம் வாங்கிவா. சீ நாயே! போ. உதைபட்டுச் சாகாதே" என்று வாய்க்கு வந்தபடி வைதான்.

கமலா கண்ணீர் வடித்தவண்ணமாக, "இங்கே பாருங்கள்; என்னை என்ன வேண்டுமானுலும் வையுங்கள். எங்கப்பாவை ஏன் இப்படி அநியாயமாக வைகின்றீர். அவர் வயது என்ன? உங்கள் வயது என்ன? வயதுக்காவது மரியாதை தர வேண்டாமா? தவிர அவர் என்ன செய்வார். சாதாரண வருவாய் உள்ளவர்தானே. உங்களுக்கு எவ்வளவோ செய்தாரே. நீங்கள் ஒரு உத்தியோகம் பார்க்காமல் உட்கார்ந்து தின்ருல் குடும்பம் முன்னுக்கு வருமா? நீங்களும் ஆண் பிள்ளைதானே? மாமனாரை வைவது ஒரு பெருமையா? படித்ததற்கு இது அடையாளமா? சென்றது செல்லட்டும். இனியும் இப்படிப் பேசாதீர்" என்ருள்.

கிருஷ்ணசாமி நாகப்பாம்பு போல் சீறினன். "ஏண்டி! உனக்கு இவ்வளவு வாயா? B. A. படித்தவன் என்று கூட என்னை நினையாமல் எதிர்த்துப் பேசுகின்ருயா? உன்னைப் பெற்ற அந்த மடையனை உதைக்கவேணும். குட்டிச்சுவரே! இன்னும் எனக்குக் கோபம் வரவில்லை. என் காலிலே உதிர்கின்ற தூசு விலையாவானு உன்னப்பன்? தாலியைக் கொடுத்துவிட்டு



ஓடு" என்று உரத்த குரலில் வைது பளார் பளார் என்று அவள் கன்னத்தில் ஓங்கி ஓங்கி அடித்தான். அவள் கன்னம் வீங்கிவிட்டது. உடம்பு பதறியது. பாவம் பெண்பிள்ளை என்ன செய்வாள். அந்த முரடனிடம் சிக்கி ஆலையிலிட்ட கரும்புபோல் நொந்தாள். அவள் கன்னமும் கண்களும் சிவந்தன.

அன்று மாலை தாய்வீடு போய் தந்தையின் கால் மீது விழுந்து அழுதாள். விஸ்வநாதன் மகளுடைய அந்தப் பரிதாபமான நிலைமையைக் கண்டு பெரிதும் வருந்தினன். அவள் கன்னம் வீங்கியிருப்பதையுங் கண்டான். நீலாம்பாளும் கண்ணீர் சிந்தினள். "அம்மா! என்ன சங்கதி?" என்று கேட்டான் விஸ்வநாதன். "அப்பா! நான் என்ன என்று சொல்லட்டும்? ஒன்ரு? இரண்டா? ஆயிரம் துன்பம்; நாடோறும் வசவு; அடி; உதை. உங்களையும் அவர் கண்டவாறு நிந்திக்கின்ருர். ஒரு வேலையும் செய்யாமல் சீட்டாடி துஷ்டர்களுடன் காலங் கழிக்கின்ருர். உங்களிடம் பணம் வாங்கிவருமாறு என்னை இம்சிக்கின்ருர். அப்பா! நான் என்ன பாவம் செய்தேனே? தாங்கள் அன்று கூறிய சொல்லைத் தள்ளியதன் பயன் இது. என்னுல் சகிக்கமுடியவில்லையப்பா! ஒரு நாள் ஒருயுகமாகக் கழிகின்றது. என் துன்பத்தை நினைத்தால் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கின்றது. அவர் நடத்தை ஒன்றுகூட ஒழுங்காக இல்லை. ஆயிரந் தேள் ஒன்று சேர்ந்து நரம்புகள் தோறும் கொட்டியதுபோல் நான் துன்புறுகின்றேன்" என்று கூறியழுதாள்.

பெண்ணின் துயரத்தைக் கண்ட விஸ்வநாதன் அப்படியே மரம்போல் நின்றுவிட்டான். நெடுநேரம் பொறுத்து '.........ம்' என்று பெருமூச்சு விட்டு, தன் மனைவியை விறைத்துப் பார்த்தான். அப் பார்வை காலசங்காரக் கடவுளது பார்வைபோல் இருந்தது. 'அன்று நான் என்ன சொல்லியும் கேளாமல் B.A. என்று பெண்ணைக் கொடுத்தாயே. இந்தப் பாவத்திற்கு யார் உத்தரவாதம்......' என்றெல்லாம் அப் பார்வையால் பேசாமல் பேசினன். ஒன்றும் வாய்விட்டுப் பேசவில்லை. அவனுடைய அடக்கமுடியாத துக்கம் கோபம் எல்லாம் அவன் பார்வையில் இருந்து வெளிப்பட்டன. அவன் மனைவி நீலாம்பாள், அவன் முன் தூண்போல் தலைசாய்த்து நின்ருள். மௌனம் நிலவியது.

விஸ்வநாதன் வெளியேபோய் நெருங்கிய நண்பனிடம் கடன் வாங்கி வந்து ஐம்பது ரூபாயை மகளிடம் கொடுத்து, "அம்மா! குலைக்கின்ற நாய்க்கு.........துண்டு போடுவது போல் அந்த மூடனிடம் இதைக் கொண்டுபோய்க் கொடு. ஊழ்ப்படியே எல்லாம் நடக்கும். முன்னுள் பட்ட கடனைக் கொடுத்துத்தானே தீர்க்கவேணும். அடியவர் கவலை

தீர்க்கின்ற ஆறுமுகப்பெருமானை நெஞ்சார நினைத்து வணங்கு. எங்கும் நிறைந்த அக் கருணைக் கடவுள் அவனுக்கு நல்ல புத்தியைக் கொடுப்பார். குழந்தாய்! நான் என்ன செய்வேன்? பண்பாடில்லாத படிப்பு உயிரில்லாத உடம்புக்குச் சமானம் என்பதை இதன் மூலம் அறிந்துகொள்; போய்வா'' என்றார்.

கமலா ஐம்பது ரூபாயை எடுத்துக்கொண்டு கணவனிடம் வந்தாள்; அதைக் கொடுத்தாள். அத்துடன் அவன் அமைதி யடைவான் என்று கருதினாள். கிருஷ்ணசாமி அப்பணத்தைத் தூக்கி வீசி எறிந்தான். "தடிச் சிறுக்கி! பிச்சைகாரக் காசு; கேவலம் ஐம்பது ரூபாயைப் போய் வாங்கி வந்தாயே? இதை விட அவமானம் உண்டா? அநாதையே! மூதேவி! உன்னை யடித்து எனக்குக் கைகூட வலிக்கின்றது'' என்று ஏசினான். கமலா அப்படியே அசைவற்று நின்றாள். அவள் கண்ணீர் பூமியை நனைத்தது. அப்பணத்தை மறுபடியும் எடுத்துக் கொண்டுபோய் இரண்டு மூன்று நாள் இஷ்டம்போல் வீட்டுக் கும் வராமல் திரிந்தான்.

இவ்வாறு சதா அடி உதை நிந்தனையுடன் காலங் கழித்தாள் கமலா. ஒரு நாள் கூட அவள் வாழ்வில் இன்ப மில்லை. முருகப் பெருமானுடைய படம் ஒன்றை வைத்து, மலரிட்டு தூப தீபங் காட்டி, "முருகா, முருகா! என் கணவ னுக்கு நற்புத்தியைக் கொடு; நீ ஞானபண்டிதனல்லவா! பெண் ணாகிய என் துயரத்தைக் களைவது உனக்குக் கடனல்லவா! சுவாமிநாதா! கூறும் அடியார் வினை தீர்க்கும் குமரகுருவே! என்னைக் கைநழுவ விட்டுவிடாதே. முருகா! நான் பட்டது போதும். இனி பட முடியாது? தேவர் துயர் தீர்த்த மூவர் முதல்வா!'' என்று காலையும் மாலையும் கண்ணீர் சிந்தி வழி பட்டு வந்தாள்.

ஒருநாள் கிருஷ்ணமூர்த்தி தனது புதிய நண்பன் அழைப் புக் கிணங்கி தன் மனைவி கமலாவுடன் அவன் வீட்டிற்குச் சென்றான். நண்பன் இருவரையும் வரவேற்று கூடத்தில் இரு ஆசனங்களில் இருத்தினான். குளிர்ந்த பானங் கொடுத் தான்.

அந்த நண்பன் கூடத்தின் மற்றப் பாதிக்குச் சென்றான். அக் கூடத்தின் பாதியில் பெரிய திரைவிட்டிருக்கின்றது. அங்கே அவன் மனைவி இரு புதிய ஆடைகளைக் கொடுத்து கணவனை உடுத்துக்கொள்ளுமாறு வேண்டினாள். இருபத் தைந்து ரூபாயை எண்ணிக் கணவனிடம் தந்தாள். அவன் இவை ஏது? என்று மனைவியை வினவினான். அவள் "என் பிதா கொடுத்தார்'' என்றாள். உடனே அவனுக்கு கோபம் மூண்டது.



"ஏண்டி! உனக்குப் புத்தி யிருக்கின்றதா? மாமனாரிடம் வாங்கிப் பிழைக்கின்ற பிழைப்பு ஒருபிழைப்பா? கடவுள் எனக் குக் கைகால் கொடுத்திருக்கின்றாரே! கை கால் இல்லாத பறவைகளுமல்லவா பட்டினியின்றி வாழுகின்றன. பேச வாயும் செய்யக் கையுமில்லாத ஆடுமாடுகளும் வயிற்றை வளர்க்கின்றன. மனிதனுக்குக் கைகால் அறிவு ஆற்றல் வாக்கு முதலிய அனைத்தையும் ஆண்டவன் தந்திருக்கின் றானே. உழைத்து உண்ணுகின்ற உணவல்லவா நல்ல உணவு. "போனகம் என்பது தானுழந்து உண்டல்'' என்ற ஔவை யார் வாக்கு வேத வாக்கல்லவா? மாமனாரிடம் வாங்கி மான மிழந்து ஈனமுழந்து வாழலாமா? அப்படி வாழ்வதினும் மர ணமே சிறந்தது. பெண்ணே! தெய்வத்தா னாகாதெனினும் முயற்சி தன் மெய் வருந்தக் கூலிதரும். எனக்கு உனது செயல் பெரும் அவமானத்தைத் தருகின்றது. அதிலும் மாம னார் தகப்பனாருக்குச் சமானம். வயது முதிர்ந்தவர். அவரைச் சிரமப் படுத்தலாமா? படுத்தினால் தெய்வம் துணை செய்யுமா? இளமையுடன் கூடிய நான் உழைத்து அவருக்கு உப கரிக்க வேணும். அதுதான் புகழும் புண்ணியமுமாகும். நான் கூறுவது உன் மனதிற்குப் படவில்லையா? இப்படி வா! இந்தப் பணத்தையும் வேட்டியையுங் கொண்டுபோய் உன் பிதாவிடம் கொடுத்துவிட்டு மறுவேலை பார்.'' என்று கூறிக் கொடுத்தனுப்பினான்.

இவ் வசனங்களைக் கேட்டாள் கிருஷ்ணசாமி. அவன் உள்ளமாகிய அப் பள்ளத்தில் அச் சொற்களாகிய தண்ணீர் அப்படியே தேங்கியது. பரிசவேதியால் இரும்பு தங்கமாவது போல் அவன் மனம் மாறியது. தன் பிழையையும் தன்மானத் தையும் உணர்ந்தான். அவனுடைய மடமைப் பேய் அகன் றது. தெளிவு பிறந்து பின்னர் உணவு உண்டு பசியாறினான். அங்கே உடம்புக்கு ஒரு விருந்தும் உணர்வுக்கு ஒரு விருந்தும் கிடைத்தன.

கமலா வணங்கிய கந்தக் கடவுள் அந்த நண்பனை அதிஷ் டித்து அறவுரை கூறவைத்தார். அதன் மூலம் அவனை நல் வழிப் படுத்தினார்.

கிருஷ்ணசாமி மனைவியுடன் நேரே மாமனாருடைய வீட்டிற் குச் சென்றான். அவர் கால்மீது வீழ்ந்து வணங்கினான். "நான் அறியாமையால் செய்த பிழைகளைப் பொறுக்கவேண்டும்'' என்று வேண்டினான். இந்த அதிசயத்தைக் கண்ட விஸ்வ நாதன் திடுக்கிட்டுவிட்டான். மனப்பூர்வமாக மருகனை வாழ்த்தினான்.

கமலாவுடன் கிருஷ்ணசாமி தன் வீடு சென்றான். ஒரு கம்பெனியில் வேலைக்கு அமர்ந்தான். கண்ணுங் கருத்துமாக

# யாத்திரை

(அன்பன் மு. பெருமாள்)

"அருள்மயமாய் விளங்கும் அண்ணலே! அருட்பெருஞ் சோதி வடிவான அறுமுகப் பெருமானே! பரங்குன்றில் மேவும் சரவணபவனே! செந்தூர்ப்பதியில் சிறந்து விளங்கும் செவ்வேள் பெருமானே! பணிவார்க்கு ஞானம் வழங்கும் பழநிக் குமரனே! காமியத்தழுந்தாது காத்து ரட்சிக்கும் சுவாமிமலை வாழ் சுவாமிநாதனே! தணியா வினைகளையும் தணிய வைக்கும் தணிகாசலனே! வற்றாத கருணை வள்ளலாய் விளங்கும் வள்ளி மலையப்பா! ஆறுபடை வீடுகளிலும் அருட்கோலம் கொண்டு ஆருயிர்கள் வழிபட்டு உய்ய அருள் பாலிக்கும் அயில்வேலரசே! ஞாலமெல்லாம் படைத்துப் பேணும் ஞானபண்டிதனே! காலமெல்லாம் வீணாகக் கழியுதே! பெற்ற மனிதப்பிறவி உற்ற வினைகளில் சிக்கி உழல்கின்றதே! பொய்யுடலை மெய்யுடலாகப் பேண அல்லாதனவெலாம் ஆற்றிப் பிழைக்க மனம் அஞ்சவில்லையே! மறதி மாயை அறியாமை என்ற மூன்றினுல் கருவிற் கட்டுண்டு பட்ட கஷ்டத்தைக் கருதாமல் மேலும் பல பிறவியெடுத்துழலும் தீய வாழ்க்கை வளர்ந்து வருகின்றதே!

முருகப் பெருமானே! என் இன்னல் வாழ்க்கைக்கு இறுதி கட்ட எண்ணுகிறேன். இந்த உலகில் சிறந்த புண்ணிய பூமியாக விளங்கும் பரத கண்டத்திலே, இமயம்முதல் குமரி முனை வரையுள்ள உமது திருக்கோயில்களையும், தீர்த்தங்களையும், இயற்கை வளங்களையும் கண்டு களித்து ஆங்காங்கு உள்ளமகான்களைத் தரிசித்து பிறவியின் பயனை அடைய அருள் வழங்காயோ! "நினைத்ததை யளிக்கும் மனத்தையு முருக்கும் நிசிக்கரு வறுக்கும்" பெருமானன்றோ நீர்! எனவே எண்ணிய எண்ணத்தை ஈடேற வைப்பாய் புண்ணியனே!" என்று கண்ணீர் சொரிந்து உள்ளங் கசிந்துருகி ஏகாந்தமாய் இருந்து பிரார்த்தனை செய்த வண்ணமாக யிருக்கின்றுன் இளைஞன் நடராஜன்.

---

வேலையை நேர்மையாகப் பார்த்தான். முதலாளி மனம் அவன் விஷயத்தில் மகிழ்ந்தது. நாள் செல்லச் செல்ல அவனைப் பங்காளியாகச் சேர்த்துக் கொண்டார். அபரிமிதமாக லாபம் வந்தது.

கிருஷ்ணசாமி நிலபுலம் மாடமாளிகைகள் வாங்கி அடக்கமாகவும் தெய்வபக்தியுடனும் வாழ்ந்தான். கமலா தனக்கு அருள்புரிந்த கந்தவேளை எந்தவேளையும் மறவாது சிந்தித்து வந்தித்தாள்.

---



இந் நிலையில் அவனது இரு கண்களையும் யாரோ பின்புறமாக வந்து மூடுவதை உணர்ந்தான். 'இது என்ன துணிச்சல். யாரது என் கண்ணைப் பொத்துவது?' என்று மூடிய கரங்களை அப்புறப்படுத்தினுன்.

நெஞ்சை யள்ளும் காதல் புன்னகையோடு, 'அத்தான்! நான் ஒருத்தி தங்களுக்காக காத்துக்கொண்டிருக்கின்றேனே! என்னை ஏற்று இன்புருமல் ஏகாந்தமாகயிருந்து இன்புற எண்ணுகின்றீர்களே! இது நியாயமா? நீங்கள் பேசிக்கொண்டிருந்த யாவையும் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். தனியாக யாத்திரை சென்ருல் ரசிக்கமுடியுமா? என்னை மணந்த பின் இருவருமாக யாத்திரை சென்ருலன்ரோ இன்புறலாம் என்ற எண்ணம் ஏன் தங்கட்கு வரவில்லை. நான் என்ன கடவுள் இல்லை என்று கூறும் நாஸ்தீகப் பெண்ணு! தாங்கள் செல்லும், கையாளும் மார்க்கத்தைத் தலைவணங்கி பின்பற்றத் தயாராகயிருக்கும் என்னைப் புறக்கணித்து நாள் கடத்துவது நல்லதுதானு?' என்ருள் சிவகாமி.

சிவகாமி! நீ எப்படி இங்கு இந்த நேரத்தில் வந்தாய்! கன்னிப்பெண்ணுன நீ ஒரு ஆடவனை கைதீண்டலாமா? பெண்ணினத்துக்குப் பழிதேடும் செயலன்ரோ நீ புரிந்தாய்! நீ உடனே திரும்பிச் செல். உரிமை ஏற்பட்ட பின் உன்னைச் சந்திப்பேன். அத்தை மகளாளுலும் நீ வித்தைப் பேச்சால் என் விருப்பத்தை மாற்ற முடியாது. காசி யாத்திரை போய் மீண்ட பின்னர்தான் கலியாணம். எனவே நீ மேலும் தாமதிக்காமல் இருப்பிடம் திரும்புக. பெற்ரேர்கள் அனுமதியில்லாமல் பெயர்ந்து வருவது பிசகு.

அத்தான்! கன்னியாக எத்தனைநாள் காலங் கழிப்பேன்! தாங்கள் காசியாத்திரை என்று காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கின்றீர்களே! கண்டு பேசி கருத்தை மாற்றலாம் என்ற எண்ணத்தால் தங்களைக் காண வந்தேன். எனக்கு உரிய உயிர்த்துணைவராகத் தங்களை என் உள்ளத்தில் வரித்துக் கொண்டபின், தங்களைத் தனியாக வந்து சந்திப்பதில் தவறில்லை. கணவனுர் செய்ய மறந்த அறக் கடமைகளைக் கற்புக்கரசிகளான பெண்கள் கவன மூட்டவேண்டியது கடமைதானே!

சிவகாமி! சம்பாஷணைக்கு உரிய நேரம் இதுவல்ல. விரைவில் காலம் வரும். பேச எண்ணுவதை யெல்லாம் நீ அப்போது பேசுக. என்னை நல்ல சிந்தனையிலிருந்து மாற்றிவிட்ட உன் வரவை இது சமயம் நான் விரும்பவில்லை. விரைந்து செல்க.

அத்தான்! இயற்கைக்கு மாருக வாழ எண்ணுவது ஏற்றதன்று. இறைவனே சக்தியும் சிவனுமாக இருந்துதான்

யாவற்றையும் இயக்குகின்றார். எனவே நாமிருவரும் சேர்ந்து இறை வழிபாடாற்றி ஈடேற்றம் பெறுவது நலமாகும். காலத்தில் செய்யாத கருமம் ஞாலத்தில் சிறக்காது. பெண்ணுறவைப் பேணுது வாழ்ந்த மகான்களில் பலர், பின்னர் வாழ்க்கையில் வழுக்கி வீழ்ந்த கதைகளைப் பெரிதும் சிந்தித்துப் பாருங்கள். போய் வருகிறேன். காசி யாத்திரையின் பெயரால் இனியும் காலத்தை வீணுக்காதீர்கள்.

'அவளும் அறிவாளிதான் என்று தெரிகின்றது. உள்ளதை உணர்த்துகின்றாள். என்றாலும் காசி யாத்திரையை முடிக்காமல் கலியாணத்தைக் குறித்துக் கனவில்கூட சிந்திக்க விழையேன். கொண்ட குறிக்கோளை நிறைவேற்றாத வாழ்வு தண்ட வாழ்வாகும்' என்று சிந்தித்த வண்ணமாக அவன் இருக்கையில்,

"ஏண்டா நடராஜா! ஐந்து மணிக்கெல்லாம் வெளியில் போகவேண்டும் என்று தெரிவித்த நீ மணி ஆறு ஆகப் போகின்றதே! இன்னும் எழுந்திருக்காமலிருக்கின்றாய்" என்று அவன் தாயார் குரல் கேட்டு திடீரென்று தூக்கம் கலைந்து எழுந்தான் நடராஜன். சே, நாம் கண்டது கனவுதானா! மனித வாழ்க்கையும், எண்ணமும் செயலும் யாவும் நிலையற்ற கனவாகத் தானே முடிகின்றது என்று சலிப்படைந்தவனாய் தன் காலைக் கடன்களை முடித்து, நீராடி நித்தியானுட்டானம், இறை வழிபாடுகளைப் புரிந்து சிற்றுண்டி உண்ண வந்தான்.

அவன் தாயார், 'நடராஜா! வயதான நான் இன்னும் எத்தனை நாளைக்கு ஒருத்தியாக இருந்து உழைப்பேன். என்னால் குடும்பக் காரியங்களைச் செய்ய சக்தியில்லை. நீயோ எத்தனை முறை சொன்னாலும் கலியாணத்தைக் குறித்து கவலைப் படாமலிருக்கின்றாய்! எனக்கு ஓய்வு கொடுக்கவாவது நீ உடனே கலியாணத்தை முடிக்க உன் சம்மதத்தைச் சொல். உன்னை நம்பி அவர்களும் சமைந்த பெண்ணை எத்தனை நாளைக்கு வைத்துக்கொண்டு காத்திருப்பார்கள். நீ பிடிவாதத்தை விட்டு ஒப்புதலைக் கூறினால் இந்த மாதமே திருமணத்தை முடித்துவிடலாம் என்று நினைக்கின்றேன்' என்றாள்.

அம்மா! தங்கள் சிரமம் எனக்கும் தெரிகின்றது. கலியாணத்துக்கு முன் காசியாத்திரை போய் வரக் கருதுகின்றேன். அதற்கு அனுமதி கொடுங்கள். விரைவில் வந்து திருமணம் செய்துகொள்கின்றேன்.

இந்த சிறுவயதிலே தன்னந்தனியாக காசி யாத்திரை யாவது! குடும்பத்தில் ஈடுபட்ட பின்னர் தம்பதிகள் இருவருமாக வயது முதிர்ந்த காலத்தில் காசியாத்திரை போவதுதான் நல்லது.

(தொடரும்)

## மதுரை திருவருள் தவநெறி மன்றச் சார்பில் நடந்த சொற்பொழிவுகள்

### சொற்பொழிவாளர்: திரு. திருமாமணி சிவம்

| நாள் | ஊர் | பொருள் |
|---|---|---|
| விஜய பங்குனி | | |
| 1. 29உ | [illegible] | '[illegible]' |
| 2. 30உ | ,, | '[illegible]' |
| ஜய சித்திரை | | |
| 3. 5உ | [illegible] | '[illegible]' |
| 4. 7உ | [illegible] | '[illegible]' |
| 5. 12உ | [illegible] | '[illegible]' |
| 6. 14உ | [illegible] | '[illegible]' |
| 7. 21உ | [illegible] | '[illegible]' |

### சொற்பொழிவாளர்: திரு. [illegible] பிள்ளை

| நாள் | ஊர் | பொருள் |
|---|---|---|
| விஜய பங்குனி | | |
| 1. [illegible]உ | [illegible] | [illegible] |
| 2. [illegible]உ | [illegible] | [illegible] |
| 3. [illegible]உ | [illegible] | [illegible] |
| 4. 10உ | [illegible] | [illegible] |
| 5. 21உ | [illegible] | [illegible] |
| 6. 22உ | [illegible] | [illegible] |
| 7. 27உ | [illegible] | ,, |
| 8. 28உ | ,, | ,, |
| 9. 30உ | [illegible] | [illegible] |

### சொற்பொழிவாளர்: [illegible] P. C. [illegible] முதலியார்

விஜய பங்குனி

1. 2உ ஸ்ரீ [illegible] '[illegible]'
2. 7உ [illegible] '[illegible]'
3. 8உ [illegible] '[illegible]'
4. 9உ [illegible] '[illegible]'
5. 11உ [illegible] கோவில் '[illegible]'
6. 16உ ஸ்ரீ [illegible] கோவில் [illegible], '[illegible]'
7. 20உ [illegible] '[illegible] அமியம்'
8. 23உ ஸ்ரீ [illegible], ஆனை, '[illegible]'
9. 28உ ஸ்ரீ [illegible] கோவில், '[illegible]'
10. 30உ ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் கோவில், ஆனை '[illegible]'

Regd. No. M. 3487.

திருப்புகழமிர்தம்

கரூர் விலை என்பதே நம்பிக்கை

விசேஷகாலங்களை முன்னிட்டு

பனாரஸ், சேலம், பெங்களூர், கோயமுத்தூர், காஞ்சீபுரம், மதுரை

# பட்டு & நூல் ஜவுளி தினுசுகள்

ஏராளமாக வரவழைத்திருக்கிறோம். தவறாது விஜயம் செய்யுங்கள்

# ஜெ. மூ. சாமி

கீழமாசி வீதி, (பெரிய விளக்குத்தூண் சமீபம்) மதுரை.

*Head Office :* வடக்கு மாதுளம் கொல்லைத்தெரு, உறையூர், திருச்சி

*Branch :* கடைவீதி, நாகப்பட்டினம்

Printed & Published by M. Madhusudana Sivam at the Thiruppugal Amirtham Press, 144, Swaminaicken Street, Chintadripet, Madras. Editor: Sri KIRUPANANDAVARI

END OF ISSUE